**செய்தி வெளியீடு எண்: 166** **நாள்: 06.03.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் இன்று (6.3.2018) நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் ஆற்றிய நிறைவு உரை**

மாண்புமிகு துணை முதலமைச்சர்அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

தலைமைச் செயலாளர் அவர்களே,

அரசுத் துறை செயலாளர்களே,

துறைத் தலைவர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவர்களே,

நேற்று, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும், தங்கள் மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பது பற்றிய நல்ல விவாதங்களை முன் வைத்தீர்கள்.

இன்று, இந்த அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை நல்ல முறையில் செயல்படுத்தி, மக்களிடம் கொண்டு செல்வது குறித்து பல்வேறு நல்ல கருத்துக்களை பகிர்ந்து கொண்டீர்கள்.

இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதிலும், மனிதவள மேம்பாட்டிலும், பொருளாதார வளர்ச்சியிலும் முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதற்கு உங்கள் அனைவரின் செம்மையான செயல்பாடுதான் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

இம்மாநாட்டில் உங்களுக்குள் நல்ல பல கருத்து பரிமாற்றங்கள் நிகழ்ந்துள்ளது. பிற மாவட்டங்களின் செயல்பாடுகளுடன் உங்கள் மாவட்டத்தின் செயல்பாட்டினை ஒப்பிட்டு பார்த்திருப்பீர்கள் என நினைக்கிறேன். இது உங்களுக்கு ஒரு நல்ல சுய பரிசோதனை ஆகும். இதன் மூலம், பல்வேறு மக்கள் நலப் பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை

செயல்படுத்துவதில் இருந்த உங்களது பார்வையினை மேம்படுத்தியிருக்கும் என நான் நம்புகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு பொது மருத்துவரைப் போன்று அனைத்து விதமான மக்களின் தேவைகளுக்கும், பிரச்சனைகளுக்கும் நல்ல தீர்வை வழங்குவது மிக அவசியமாகும்.

அவ்வப்போது பொது மக்களிடமிருந்து வரும் புகார் மற்றும் மனுக்களின் மீது தங்கள் தனிகவனத்தை செலுத்தி, அவற்றை இனம் பிரிக்க வேண்டும். அவ்வாறு இனம் பிரிக்கப்பட்ட புகார்கள் மற்றும் மனுக்களின் மீது ஒரு முழுமையான தீர்வினை எட்டுவதற்கு, மாவட்ட அளவில் அனைத்து துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும். இதன் மூலம் பொதுமக்களின் மனுக்கள் மற்றும் புகார்கள் மீது ஒட்டுமொத்த தீர்வுகளை காண முடியும்.

பல்வேறு துறைகளுக்கான வாராந்திர, மாத சீராய்வுகள் மிக அவசியம் என்றாலும், **கள ஆய்வு** செய்து அந்த திட்டத்தின் உண்மை நிலையினை அறிவதற்கு நல்ல வாய்ப்பாகும். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தவறாமல் கள ஆய்வு செய்ய வேண்டும்.

மேலும், பொது மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வழங்குதல், வீட்டுமனைப் பட்டா வழங்குதல் போன்ற இனங்களிலும், சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கியிருக்கும் மக்களுக்கு தேவையான ஓய்வூதியம் வழங்குதல், திருமண நிதியுதவித் திட்டம் வழங்குதல் போன்ற அரசு நலத் திட்டப் பணிகளை சிந்தாமல் சிதறாமல் மக்களுக்கு கொண்டு செல்லுவதில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023ல் உள்ள குறிக்கோள்களை முழுமையாக எய்திடும் வகையில், துரிதமாக நாம் அனைவரும் பணியாற்றிட வேண்டும்.

**“முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்**

**படுபயனும் பார்த்துச் செயல்.”**

என்ற வான் புகழ் பெற்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க, ஒவ்வொரு மக்கள் நலத் திட்டத்தினையும் மற்றும் வளர்ச்சித் திட்டத்தினையும், செய்து முடிக்கும் வகையும், அதனால் கிடைக்கும் பெரும் பயனையும் ஆராய்ந்து, இடையூறுகளை எதிர்கொண்டு நல்ல முறையில் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி, உங்கள் திறனை அதிகரித்துக் கொண்டு, அரசிற்கும் நற்பெயரினை பெற்றுத் தர வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

**“எதையும் முழுமையான ஈடுபாட்டோடு செய்தால்**

**வெற்றி நிச்சயம். அதை, ஒரு சமூக அர்ப்பணிப்பு**

**உணர்வோடு செய்தால் அது தான் தேச சேவை”**

என்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கூற்றுப்படி உங்கள் பணி மேலும் சிறக்க எனது வாழ்த்துகள் மற்றும் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

வணக்கம்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**